# மாஓ சேதுங்

# புரட்சியை இறுதி வரை நடத்துக

அ. யேசுராசா
குருநகர்.
12-8-70

# மா ஓ சேதுங்

## புரட்சியை இறுதிவரை நடத்துக

தொழிலாளி பிரசுரம்
1969

# புரட்சியை இறுதிவரை நடத்துக

மா பெரும் விடுதலை யுத்தத்தில் சீன மக்கள் இறுதி வெற்றி பெறுவது நிச்சயம். நமது எதிரிகூட இதன் விளைவை ஒட்டி இனிமேல் சந்தேகப்படமாட்டான்.

யுத்தம் ஒரு வளைவு நெளிவான பாதையில் சென்றுள்ளது. பிற்போக்கு கோமிந்தாங் அரசாங்கம் எதிர்ப்புரட்சி யுத்தத்தை ஆரம்பித்தபோது அது மக்கள் விடுதலைச் சேனையைப் போல் சுமார் மூன்றரை மடங்கு துருப்புகளை வைத்திருந்தது. கோமிந்தாங் ராணுவத்தின் தளபாடங்கள், ஆட்பலம் பொருளாயத மூலங்கள் ஆகியவை மக்கள் விடுதலைச் சேனையின் தளபாடங்கள், ஆட்பலம், பொருளாயத மூலங்கள் ஆகியவற்றைவிட மேலும் மேம்பாடானவை. அது மக்கள் விடுதலைச் சேனையிடம் இல்லாத நவீன தொழில் துறைகளையும், போக்கு வரத்து சாதனங்களையும் பெற்றிருந்தது. அது அமெரிக்க ஏகாதிபத்தியத்திடமிருந்து பெருமளவில் ராணுவ பொருளாதார உதவியைப் பெற்று நீண்டகாலத் தயாரிப்புகளும் செய்திருந்தது. எனவே யுத்தத்தின் முதலாவது ஆண்டில் (அதாவது 1940 ஜுலை முதல் 1947 ஜுன் வரை) கோமிந்தாங் தாக்குதலிலும் மக்கள் விடுதலைச் சேனை தற்காப்பிலும் நின்றன. 1949ம் ஆண்டு வடகிழக்கில் ஷென் யாங், சிபிங், சாங்சுன், கிறின், ஆன்துங் முதலிய நகரங்களையும், லியௌநிங், லியௌபெய், ஆன்துங் மாகாணங்களில் பெரும் பகுதியையும் கோமின்தாங் வசப்படுத்தியிருந்தது. மஞ்சள் நதிக்குத் தெற்கில் அது ஹுவாய்யின், ஹோசெ ஆகிய நகரங்களையும், ஹுபெய்-ஹுநான்-ஆன்ஹுவெய் - கியாங்ஸு - ஆன்ஹுவெய், ஹோநான் - ஆன்ஹுவெய்—கியாங்ஸு, தென் மேற்கு ஷன்துங் விடு

தலைப் பிரதேசங்களில் பெரும் பகுதியையும் இடங்கொண் டிருந்தது. பெரும் சுவருக்கு வடக்கில் செங்தெஹ், சைனிங், சாங்சியாகோ ஆகிய நகரங்களையும், ஜெஹொல், சுய்யுஆன், சஹார் மாகாணங்களில் பெரும் பகுதியையும் கைப்பற்றி யிருந்தது. வெற்றி வீரன் போல கோமிந்தாங் மிரட்டி அடித்து இறுமாந்து திரிந்தது. மக்கள் விடுதலைச் சேனை ஒரு சரியான யுத்த தந்திரத்தை பின்பற்றியது; அதன் பிரதான நோக்கம் கோமிந்தாங்கின் வினைத்திறனுடைய பலத்தை அழிப்பதன்றி, பிரதேசத்தைப் பாதுகாப்பதல்ல; ஒவ்வொரு மாதமும் ஒழுங்கான கோமிந்தாங் படைகளில் ஏறக் குறைய சராசரி எட்டு பிறிகேட்டுகளை (இது இன்றைய எட்டு டிவிஷன்களுக்குச் சமம்) ஒழித்துக் கட்டியது. இதன் விளைவாக, கோமிந்தாங் பூரணத் தாக்குதலுக்கான அதன் திட்டத்தைக் கைவிடுமாறு இறுதியில் நிர்ப்பந்திக்கப்பட் டது. 1947 நடுப்பகுதி வரையில் கோமிந்தாங் தனது தாக்குதலின் பிரதான இலக்குகளை தெற்குப் போர் முன் னணியின் இரண்டு இறகுகளுடன் அதாவது ஷன் துங், வட ஷென்ஸி ஆகியவற்றுடன் கட்டுப்படுத்த வேண்டியிருந் தது. 2வது ஆண்டில் (அதாவது, 1947 ஜூலை முதல் - 1948 ஜூன் வரை) யுத்தத்தில் ஒரு அடிப்படை மாற்றம் ஏற்பட் டது. ஒழுங்கான கோமிந்தாங் படைகளை பெருந்தொகை யில் ஒழித்து விட்டு மக்கள் விடுதலைச் சேனை தெற்கு வடக்கு முன்னனிகளில் தற்காப்பிலிருந்து தாக்குதலுக்குச் சென்றது. அதே வேளையில் கோமிந்தாங் தாக்குதலிலிருந்து தற்காப் புக்கு மாற வேண்டியிருந்தது. மக்கள் விடுதலைச் சேனை வட கிழக்கு சீனு, ஷன் துங், வட ஷென்ஸி ஆகியவற்றில் இழந்த பிரதேசங்களில் பெரும் பகுதியை மீட்டது மாத்திரமல்ல, போர் முன்னணியை யாங் சூ, வெய் ஷுய் ஆறுகளுக்கு வடக் கிலுள்ள கோமிந்தாங் பிரதேசங்களுக்குள்ளும் விஸ்தரித் தது. இன்றும், ஷிசியா சுவாங், யுன்செங், செபிங், லோயாங், யிசுவான், பௌகி, வெய்ஸியென், லின்பென், காய்பெங் ஆகியவற்றைத் தாங்கிக் கைப்பற்றும் போக்கில் நமது படை கவனமாக காவல் செய்யப்பட்டிருக்கும் அரண்களைத் தாக்கும்

தந்திரோபாயத்திலும் தேர்ச்சி பெற்றது. மக்கள் விடுதலைச் சேனை அதன் சொந்த பீரங்கிப்படையையும், எஞ்சினியரிங் துருப்புகளையும் அமைத்துக் கொண்டது. மக்கள் விடுதலைச் சேனையிடம் விமானங்களோ டாங்கிகளோ ,இல்லை என்பதை மறந்து விடாதீர்கள். ஆனால் அது கோமிந்தாங் படையின் பீரங்கிப்படை, எஞ்சினியரிங் துருப்புகள் ஆகியவற்றைவிட மேம்பாடான பீரங்கிப்படை, எஞ்சினியரிங் துருப்புகள் ஆகியவற்றை ஒருகால் அமைத்ததும் விமானங்கள், டாங்கிகள் எல்லாவற்றையுமுடைய கோமிந்தாங்கின் பாதுகாப்பு அமைப்பு ஒப்பீட்டு வகையில் மிக அற்பமாகவே தோன்றியது. மக்கள் விடுதலைச் சேனை நடமாடும் யுத்தத்தை நடத்தக் கூடியது மாத்திரமல்ல, நிலையான யுத்தத்தையும் ஏற்கெனவே நடத்தக்கூடியதாக இருக்கின்றது. யுத்தத்தின் மூன்றாவது ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் (அதாவது 1948 ஜூலை முதல் டிசம்பர் வரை) இன்னொரு அடிப்படை மாற்றம் நிகழ்ந்தது. இன்றுவரை கோமிந்தாங்கைவிட எண்ணிக்கையில் குறைவாக இருந்த மக்கள் விடுதலைச் சேனை தொகையில் அதிகரித்து விட்டது, அது கோமிந்தாங்கின் கனத்த காவலிலுள்ள நகரங்களைக் கைப்பற்றக் கூடியதாக மாத்திரமல்ல, ஒரே சமயத்தில் ஒரு லட்சம் அல்லது பல லட்சம் தொகையுடைய கோமிந்தாங் துருப்புகளின் பலமிக்க பிரிவுகளைச் சுற்றிவளைத்து, ஒழிக்கக்கூடியதாகவும் இருந்தது. மக்கள் விடுதலைச் சேனை கோமிந்தாங் துருப்புகளை ஒழித்துக்கட்டும் விகிதம் மேலும் வேகமாகிவிட்டது. (கிளர்ச்சி செய்து நம் பக்கத்துக்கு வந்த எதிரிப்படைகள் உட்பட) நாம் ஒழித்துக் கட்டிய பட்டாலியன் மட்டத்திலும் அதற்கு மேலும் உள்ள ஒழுங்கான கோமிந்தாங் யூனிட்களின் எண்ணிக்கை பற்றிய புள்ளி விபரங்களைப் பாருங்கள்: முதலாவது ஆண்டில் 97 பிறிகேட்டுகள்; இவற்றில் 46 பிறிகேட்டுகள் பூரணமாக ஒழிக்கப்பட்டன. 2வது ஆண்டில் 94 பிறிகேட்டுகள்; இவற்றில் 50 பிறிகேட்டுகள் பூரணமாக ஒழிக்கப்பட்டன. மூன்றாவது ஆண்டின்

முற்பகுதியில் பூர்த்தியாகாத புள்ளி விபரங்களின் பிரகாரம் 147 டிவிஷன்கள் ஒழிக்கப்பட்டன. இவற்றில் 111 டிவிஷன்கள் பூரணமாக ஒழிக்கப்பட்டன. இந்த ஆறு மாதங்களில் பூரணமாக ஒழிக்கப்பட்ட எதிரி டிவிஷன்களின் தொகை முந்திய இரண்டு ஆண்டுகளில் ஒழிக்கப்பட்ட மொத்தத் தொகையை விட 15 கூடுதலாகும். முழுப்படியாக எடுத்தால் எதிரியின் முன்னணி பூரணமாக நொறுங்கிவிட்டது. வட கிழக்கிலுள்ள எதிரித் துருப்புகள் சம்பூரணமாக ஒழிக்கப்பட்டுவிட்டன. வட சீனுவிலுள்ள எதிரிப்படைகள் விரைவில் முற்றுக ஒழிக்கப்படும். கிழக்கு சீனுவிலும் மத்திய சம வெளியிலும் ஒரு சில எதிரிப்படைகள் மாத்திரம் எஞ்சியுள்ளன. யாங் சூ நதியின் வடக்கிலுள்ள கோமிந்தாங்கின் பிரதான படைகளை ஒழித்துக் கட்டுவது, எதிர்காலத்தில் மக்கள் விடுதலைச் சேனை யாங் சூ நதியைக் கடப்பதையும், சீனு முழுவதையும் விடுதலை செய்ய தெற்கு நோக்கி செல்வதையும் மிகுதியும் எளிதாக்கும். ராணுவ முன்னணியில் வெற்றி பெறும் அதே வேளையில், அரசியல் பொருளாதார முன்னணிகளிலும் சீன மக்கள் மகத்தான வெற்றி ஈட்டியுள்ளனர். இந்தக் காரணத்தால் ஏகாதிபத்திய பத்திரிகைகள் முழுவதும் உட்பட, உலகம் பூராவுமுள்ள பொது அபிப்பிராயம் சீன மக்களின் விடுதலை யுத்தம் தேசிய ரீதியாக வெற்றி பெறுவது நிச்சயம் என்பதை இனிமேல் மறுக்க முடியாது.

எதிரி தானுகவே அழிய மாட்டான். சீனப் பிற்போக்குவாதிகளோ அல்லது சீனுவிலுள்ள அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு சக்திகளோ வரலாற்று அரங்கிலிருந்து சுயமாக இறங்க மாட்டார்கள்.

குறிப்பாக சீன மக்களின் விடுதலை யுத்தம் தேசிய ரீதியில் வெற்றி பெறுவதை வெறும் ராணுவப் போராட்டத்தால் இனிமேல் தடுக்க முடியாது என்பதை உணரும் காரணத்தால் அவர்கள் தினம் தினம் அரசியல் போராட்டத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றுர்

கள். ஒருபுறம், சீன பிற்போக்குவாதிகளும் அமெரிக்க ஆக்கிரமிப்பாளரும் இன்றுள்ள கோமிந்தாங் அரசாங் கத்தை தமது ''சமாதான'' சூழ்ச்சிக்கு உபயோகிக்கிறுர் கள், மறுபுறம் தங்களுடனும் புரட்சி முகாமுடனும் தொடர்புடைய சில நபர்களைத் தூண்டி, அவர்கள் தந்திர மாக வேலை செய்து, புரட்சி முகாமில் ஊடுருவி, அதற்குள் கூறப்படும் எதிர்க் கோஷ்டி ஒன்றை உருவாக்குவதற்கு அந் நபர்களைஉபயோகிக்க சூழ்ச்சி செய்கிறுர்கள். இதன் நோக்கம் பிற்போக்கு சக்திகளைப் பாதுகாத்து புரட்சி சக்திகளுக்கு குழி பறிப்பதாகும். நம்பகமான தகவலின் பிரகாரம், அமெ ரிக்க அரசாங்கம் இந்தச் சூழ்ச்சி பற்றி தீர்மானித்து சீனு வில் அதை அமுல் நடத்தத் தொடங்கியுள்ளது. அமெரிக்க அரசாங்கம் கோமிந்தாங்கின் எதிர்புரட்சி யுத்தத்துக்கு சும்மா ஆதரவளிக்கும் அதன் கொள்கையை இரண்டு போராட்ட வடிவங்கள் தழுவிய ஒரு கொள்கையாக மாற்றியுள்ளது.

(1) யாங்சூ நதிக்குத் தெற்கிலும், தொலை தூரத்தி லுள்ள எல்லை பிரதேச மாகாணங்களிலும் உள்ள மக்கள் விடுதலைச் சேனையைத் தொடர்ந்தும் எதிர்க்க, கோமிந் தாங் ஆயுதப் படைகளின் மிச்சசொச்சங்களையும், கூறப் படும் ஸ்தலப் படைகளையும் அணிதிரட்டுவது.

(2) இன்று இருக்கும் கட்டத்தில் புரட்சியைத் தடுத்து நிறுத்த அல்லது அது முன்னேறிஞல் அதைக் கட்டுப் படுத்தி, ஏகாதிபத்தியவாதிகளினதும் அவர்களுடைய வேட்டை நாய்களினதும் நலன்களை ஊறுபடுத்துமளவுக்கு செல்லாமல் தடுப்பதற்கு இயன்ற அளவில் பாடுபட புரட்சி முகாமுக்குள் எதிர்க் கோஷ்டி ஒன்றை ஸ்தாபிப்பது.

பிரிட்டிஷ், பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் இந்த அமெரிக்க கொள்கையை ஆதரிக்கிறுர்கள். மக்கள் பலர் இந்த நிலைமையை இன்றும் தெளிவாகப் பார்க்கவில்லை.

ஆனால், அவர்கள் அதை ஊடுருவிப் பார்ப்பதற்கு ஒருவேளை அதிக காலம் செல்லாது.

சீன மக்களேயும் எல்லா ஜனநாயக கட்சிகளேயும், எல்லா மக்கள் ஸ்தாபனங்களேயும் இன்று எதிர்நோக்கியுள்ள பிரச்சினை புரட்சியை இறுதிவரை நடத்துவதா அல்லது அதை அரைவழியில் கைவிடுவதா என்பதாகும். புரட்சியை இறுதிவரை நடத்த வேண்டுமானால், எல்லா பிற்போக்கு சக்திகளேயும் உறுதியாகவும், முற்றுமுழுதாகவும் துப்புரவாகவும் பூரணமாகவும் துடைத்தொழிக்க, நாம் புரட்சிகர முறையை உபயோகிக்க வேண்டும். நாம் ஏகாதிபத்தியம் பிரபுத்துவம், அதிகார முதலாளித்துவம் ஆகியவற்றை தூக்கியெறிவதில் ஆட்டமசைவின்றி ஊன்றி நிற்க வேண்டும். நாம் கோமிந்தாங்கின் பிற்போக்கு ஆட்சியை தேசிய ரீதியாக தூக்கியெறிந்து பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் தொழிலாளர்—விவசாயிகளின் நேச அணியைப் பிரதான உறுப்பாகக் கொண்ட மக்கள் ஜனநாயக சர்வாதிகாரமுடைய குடியரசு ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும். இவ்வாறு சீன தேசம் ஒடுக்குமுறையாளனைப் பூரணமாகத் தூக்கியெறியும். இந்த நாடு அரை-காலனி நிலையிலிருந்து ஒரு உண்மையான சுதந்திர நாடாக மாறும். சீன மக்கள் பிரபுத்துவ ஒடுக்குமுறை அதிகார மூலதன (அதாவது சீனுவின் ஏகபோக மூலதன) ஒடுக்குமுறை இரண்டையும் என்றென்றைக்குமாகத் தூக்கியெறிந்து பூரண விடுதலை பெறுவர். இவ்வாறு ஐக்கியம், ஜனநாயகம் சமாதானம், ஆகியவற்றைப் பெறுவர். விவசாய நாடாக உள்ள சீனுவை ஒரு தொழில்துறை நாடாக மாற்றுவதற்குத் தேவையான பூர்வாங்க நிபந்தனைகளேச் சிருஷ்டிப்பர். சீனு மனிதனை மனிதன் சுரண்டும் சமுதாயத்திலிருந்து ஒரு சோஷலிஸ சமுதாயமாக வளர்வதை சாத்தியமாக்குவர். புரட்சியை அரைவழியில் கைவிட்டால், அதன் அர்த்தம் மக்களின் விருப்பத்துக்கு விரோதமாகச் செல்வது, அந்நிய ஆக்கிரமிப்பாளர்களினதும், சீன பிற்போக்குவாதிகளினதும்

விருப்பத்துக்கு அடிபணிவது, கோமிந்தாங்குக்கு ஒரு நாள் துடித்தெழுந்து திடீரென புரட்சியை திருகிக் கொன்று நாடு முழுவதையும் மீண்டும் இருளில் மூழ்கடிக்க கோமிந்தாங்குக்கு அதன் புண்களை ஆற்ற வாய்ப்புக் கொடுப்பது ஆகும். இந்தப் பிரச்சினை இவ்வளவு தெளிவாகவும் கூர்மையாகவும் இன்று முன்னிற்கின்றது. இந்த இரண்டு பாதைகளில் எதைத் தேர்ந்தெடுப்பது? சீனுவிலுள்ள ஒவ்வொரு ஜனநாயகக் கட்சியும், ஒவ்வொரு மக்கள் ஸ்தாபனமும் இந்தப் பிரச்சினையை ஆலோசித்து, அதன் பாதையைத் தேர்ந்தெடுத்து, அதன் நிலைப்பாட்டைத் தெளிவாக்க வேண்டும். சீனுவின் ஜனநாயக கட்சிகளும், மக்கள் ஸ்தாபனங்களும் அரைவழியில் பிரிந்து செல்லாமல் விசுவாசமாக ஒத்துழைக்க முடியுமா இல்லையா என்பது அவை இந்தப் பிரச்சினையில் உடன்பாட்டுக்கு வந்து சீன மக்களின் பொது எதிரியை தூக்கியெறிய கூட்டு நடவடிக்கை எடுக்குமா இல்லையா என்பதை சார்ந்திருக்கிறது. இங்கு தேவையானது, ஒரு முகப்பாடும், ஒத்துழைப்பும் அன்றி, ஏதும் ''எதிர்க் கோஷ்டி'' ஒன்றை ஸ்தாபிப்பதோ அல்லது ஏதும் ''மத்திய பாதையை''பின் பற்றுவதோ அல்ல.

1927 ஏப்ரல் 12 ந் தேதி நடந்த எதிர்ப் புரட்சி ஆட்சிக் கவிழ்ப்பு முதல் இன்று வரையான 20 ஆண்டுகளுக்கு மேலான நீண்டகாலத்தில் சியாங் கை ஷேக் அவனைப் போன்றவர்களும் தலைமைதாங்கும் சீன பிற்போக்குவாதிகள் தயங்காமல் மக்களை வதைசெய்யும் இரத்தக்கறை தோய்ந்த ஒரு கொலைக்காரக் கும்பல் தாம் என்பதற்குப் போதிய நிரூபணம் வழங்கவில்லையா? அவர்கள் தாம் துரோகத்தையே தொழிலாளர் கொண்டவர்கள், ஏகாதிபத்தியத்தின் வேட்டை நாய்கள் என்பதற்குப் போதிய நிரூபணம் வழங்கவில்லையா? எல்லாரும் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்! 1936 சியான் சம்பவம் முதல், 1945 அக்டோபர் சுங் கிங் பேச்சுவார்த்தை முதல், 1946 ஜனவரி அரசியல் கலந்தாலோசனை மாநாடுமுதல் அந்த கொள்ளைக்கார கும்பலுடன் உள்நாட்டு சமாதா

னத்தை நிறைவேற்றலாம் என்ற நம்பிக்கையில் சீன மக்கள் அவர்களுடன் எவ்வளவு பெருந்தன்மையாக நடந்தார்கள்! ஆனால் இந்த நல்லெண்ணம் முழுவதும் அவர்களுடைய வர்க்க இயல்பை ஒரு கடுகளவு அல்லது ஒரு துளியளவேனும் மாற்றியதா? இந்தக் கொள்ளைக்காரருடைய வரலாற்றைப் பார்த்தால், அவர்களில் ஒருவரையேனும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திலிருந்து பிரிக்க முடியாது. அவர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தைச் சார்ந்து, நமது $47\frac{1}{2}$ கோடி சக தேச பக்தர்களையும் கொடுமையில் முன்னென்றும் கண்டிராத பிரமாண்டமான உள்நாட்டு யுத்தத்தில் மூழ்கடித்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் கொடுக்கப்பட்ட குண்டு வீசும் விமானங்கள், போர் விமானங்கள், பீரங்கிகள், டாங்கிகள், ரொக்கெட் செலுத்திகள், தானியங்கி ரைபில்கள் கஸோலீன் குண்டுகள், காஸ் ஏவாயுதங்கள் முதலியவற்றால் ஆண்களையும், பெண்களையும், இளைஞரையும், முதியோரையும் லட்சோப லட்சமாக வதை செய்தார்கள். இந்த கொலைகாரரைச் சார்ந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் சீனாவின் ஆதிபத்தியம், நீர் ஆகாய எல்லை இவற்றின் மீதான அரசுரிமையை அபகரித்தது; உள்நாட்டு நீர்ப் போக்குவரத்து உரிமைகளையும், விசேஷ வர்த்தக சலுகைகளையும் கைப்பற்றியது; சீனாவின் உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களில் விசேஷ சலுகைகளைப் பறித்தெடுத்தது; மக்களை அடிப்பது கொல்வது, அவர்கள் மீது வாகனங்களை செலுத்துவது பெண்களைக் கற்பழிப்பது ஆகியவற்றை எவ்வித தண்டனையும் பெறாமல் செய்யும் உரிமைகளைப் பெற்றது; இத்தகைய ஒரு நீண்ட உதிரம் கொட்டும் யுத்தத்தை நடத்தும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட சீன மக்கள் மிக நச்சுத்தனமான இந்த எதிரிகளுக்கு இன்னும் தயவு தாட்சண்யம் காட்ட வேண்டும். அவர்களை முற்றாக ஒழித்துக் கட்டவோ அல்லது வெளியேற்றவோ கூடாது என்று கூற முடியுமா? சீன பிற்போக்குவாதிகளைப் பூரணமாக ஒழித்துக் கட்டி, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு சக்திகளை வெளியேற்றுவதன் மூலம் தான் சீனா சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும், சமாதானத்தையும்

வென்றெடுக்க முடியும். இந்த உண்மை இன்று போதியளவு தெளிவாக இல்லையா?

இங்கு கவனிக்கத்தக்கது யாதெனில் திடீரென்று சீன மக்களின் இந்த எதிரிகள், தீமையற்றவர்கள், இரங்கத் தக்கவர்கள் போலக் காட்சியளிக்க ஆவன எல்லாம் செய்கிறார்கள். (வாசகர்களே! எதிர் காலத்தில் இரங்கத் தக்கவர்கள் போல மீண்டும் காட்சியளிக்க முயல்வர் என்பதை மனதில் வைத்திருக்க வேண்டும்.) இன்று கோமிங்தாங் செயல் குழுவின் தலைவராக வந்துள்ள (சுன் போ) ''ராணுவ ரீதியில் நாம் இறுதி வரை போராடினால், கடைசியில் தீர்வு ஒன்று வரும்'' என்று கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் கூறவில்லையா? ஆனால் இந்தத்தடவை அவர் பதவிக்கு வந்த அதே கணத்தில் ஒரு ''கௌரவமான சமாதானம்'' பற்றி பம்மாத்தாகக் கதைத்து ''இந்த அரசாங்கம் சமாதானத்துக்காகப் பாடுபட்டு வந்திருக்கின்றது; சமாதானம் நிறைவேற்றப்பட முடியாத காரணத்தால் தான் அது போரில் ஈடுபட்டது; ஆனால், போரின் இறுதி லட்சியம் இன்னும் சமாதானத்தை கொண்டு வருவதேயாகும்'' என்று கூறினார். சுன் போ வின் கூற்று அமெரிக்க அதிகார வட்டாரங்களிலும், கோமிங்தாங் லிபரல்கள் மத்தியிலும் விசாலமான அங்கீகாரத்தைப் பெறும் என்று டிஸம்பர் 21ந் தேதி ஷாங்கையிலிருந்து வெளி வந்த யுனைட்டெட் பிரெஸ் செய்தி ஒன்று உடனடியாக ஜோசியம் கூறியது. இப்பொழுது அமெரிக்க அதிகாரிகள் சீனாவின் ''சமாதானத்தில்'' ஆழ்ந்த அக்கறை காட்டுவது மாத்திரமல்ல டிஸம்பர் 1945 ல் நடந்த சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டன் வெளிநாட்டு மந்திரிகளின் மாஸ்கோ மாநாடு முதல் அமெரிக்கா ''சீனாவின் உள் விவகாரங்களில் தலையிடாமை என்ற கொள்கையை''க் கடைப்பிடித்து வருகின்றது என்றும் திரும்பத் திரும்ப பிடிவாதமாகக் கூறி வருகின்றனர். ''துரைமார் நாட்டிலிருந்து'' வரும் இந்த பெருந் தகையாளவர்களை நாம் எப்படி நடத்த வேண்டும்! இங்கு ஒரு புராதன கிரேக்க நாட்டு கதையை எடுத்துக் காட்டுவது பொருத்தமாகும். குளிர் காலத்தில்

ஒரு நாள் விவசாயி ஒருவன் குளிரால் விறைத்துக் கிடந்த ஒரு பாம்பைக் கண்டான். கருணையால் மனமுருகிய அவன் அதை எடுத்து, மார்போடு அணைத்தான். உஷ்ணத்தால் பாம்பு மீண்டும் உயிர் பெற்று அதன் இயற்கையான உணர்வு மீண்டதும், அப்பரோபகாரிக்கு ஒரு மரண கடி கொடுத்தது. அவ் விவசாயி இறக்கும்போது, ''ஒரு தீய பிராணி மீது நான் இரக்கம் காட்டியதற்கு எது தகுதியோ அதைப் பெற்றுக் கொண்டேன் என்று கூறினான். வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் உள்ள நச்சுப் பாம்புகள் அந்த விவசாயியைப் போல் சீன மக்களும் இறப்பார்கள்; அவனைப் போல் சீன கம்யூனிஸ்ட் கட்சியும் சீனாவின் புரட்சிகர ஜனநாயவாதிகள் அனைவரும் தம்மீது இரக்கம் காட்டுவர் என்று எதிர்பார்க்கின்றன. ஆனால், சீன மக்களும். சீன கம்யூனிஸ்ட் கட்சியும், சீனாவின் உண்மையான புரட்சிகர ஜனநாயகவாதிகளும், இரக்கும் போது அவ் விவசாயி கூறிய வார்த்தைகளை கேட்டுள்ளனர்; அவற்றை நன்றாக மனதில் பதித்து வைத்திருப்பர். இன்னும் சிறியதும் பெரியதுமாக வெள்ளையும் கறுப்புமாக, தமது நச்சுப் பற்களை காட்டிய வண்ணம் அல்லது அழகிய வனிதையர் போல வேடமணிந்து, சீனாவின் பெரும் பகுதியில் நிறைந்துள்ள இந்தப் பாம்புகள் குளிர் கால அச்சுறுத்தலை ஏற்கனவே உணர்ந்த போதிலும் அவை குளிரால் இன்னும் விறைக்க வில்லை.

சீன மக்கள் பாம்பு போன்ற இந்தப் போக்கிரிகள் மீது ஒருபோதும் இரக்கம் காட்டமாட்டார்கள். இந்தப் போக்கிரிகள் மீது இரக்கம் காட்ட வேண்டும் என்று ஏமாற்றாகக் கூறுபவர்கள், இதர விஷயங்கள் சீனாவின் பாரம்பரியங்களுக்கு தகாதவை, பெருமைக்குறைவானவை என்றெல்லாம் கூறுபவர்கள் எவரும் தமது உண்மையான நண்பர்கள் அல்ல என்று அவர்கள் நேர்மையாக நம்புகின்றார்கள். பாம்பு போன்ற போக்கிரிகள் மீது ஏன் இரக்கம் காட்ட வேண்டும்? இத்தகைய போக்கிரிகள் கருணை காட்டத் தக்கவர்கள் என்று எந்தத் தொழிலாளி, எந்த விவசாயி, எந்தப் படை வீரன் கூறுகிறான்? அமெரிக்காவும், கோமிந்தாங்கும் முன்வைக்

கும் ''சமாதானத்தை'' ஏற்றுக் கொள்ளுமாறு, அதாவது ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், அதிகார முதலாளித்து வம் ஆகியவற்றின் மிச்ச சொச்ச திரவியங்கள் பூமியில் அழிந் தொழிந்து விடாமல், அவற்றுக்கு கோயில் கட்டிக் கும்பிடு மாறு கூறுகின்ற கோ மிங்தாங் ''லிபரல்கள்'' அல்லது கோ மிங்தாங் சார்பற்ற ''லிபரல்கள்'' இருக்கின்றனர் என் பது உண்மைதான். ஆனல், அவர்கள் தீர்க்கமாக தொழிலா ளர்களோ, விவசாயிகளோ அல்லது படையினரோ அல்ல; அவர்கள் தொழிலாளர், விவசாயிகள், படையினரின் நண்பர் களும் அல்ல.

சீன மக்களின் புரட்சி முகாம் விஸ்தரிக்கப்பட வேண்டும். இன்றைய கட்டத்தில் புரட்சி லட்சியத்தில் சேர விரும்பும் அனைவரையும் அது தழுவியதாக இருக்க வேண்டும் என்று நாம் கருதுகின்றோம். சீன மக்களின் புரட்சிக்கு ஒரு பிரதான சக்தி மாத்திரமல்ல, நேச அணிகள் கூட தேவை. காரணம், நேச அணியில்லாத ஒரு படையால் எதிரியைத் தோற்கடிக்க முடியாது. இன்று புரட்சி அதன் பெருக்கில் இருக்கும் போது சீன மக்களுக்கு நண்பர்கள் தேவை. அவர்கள் தமது நண்பர் களை மனதில் வைத்திருக்க வேண்டும்; அவர்களை மறந்து விடக் கூடாது. சீனுவில் மக்களின் நலன்களைப் பாதுகாக்க முயல்கின்ற எதிரியின் நலன்களைப் பாதுகாப்பதை எதிர்க் கின்ற நண்பர்கள் பலர் இருக்கின்றனர் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த நபர்களை மறக்கக் கூடாது அல்லது அலட்சியம் செய்யக் கூடாது என்பதிலும் சந்தேகமே இல்லை. இன்னும் சீன மக்களின் புரட்சி முகாமை நாம் ஸ்திரப்படுத்த வேண்டும். தீய பிரகிருதிகள் அதற்குள் நுழைவதை அல்லது தவறுன கருத்துகள் மேலோங்குவதை நாம் அனுமதிக்கக் கூடாது என்று நாம் கருதுகின்றோம். தமது நண்பர்களை மனதில் வைப்பதை விட, புரட்சி பெருக்கு நிலையிலுள்ள இன்று சீன மக்கள் தமது எதிரிகளையும், எதிரிகளின் நண்பர்களையும் கூட உறுதியாக மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். நாம் மேலே கூறியது போல, நமது எதிரி ''சமாதான'' முறை யையும் தனது நிலையைப் பாதுகாத்து பலப்படுத்த புரட்சி

முகாமுக்குள் ஊடுருவும் முறையையும், வஞ்சமாக உபயோகிப்பதால் மக்கள் அடிப்படை நலன்களுக்கு எதிராக பிற்போக்கு சக்திகள் அனைத்தும் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு சக்திகள் சீனாவிலிருந்து விரட்டியடிக்கப்பட வேண்டும் என்று கோருவதால் எதிரி மீது இரக்கம் காட்ட வேண்டும் என்று மக்களுக்கு அறிவுரை கூறுபவர்களும், பிற்போக்கு சக்திகளைப் பாதுகாப்பவர்களும் மக்களின் நண்பர்களல்ல, மாறாக எதிரியின் நண்பர்களாவர்.

சீன புரட்சியின் கொந்தளித்தெழும் அலை தமது மனோபாவத்தை நிர்ணயித்துக் கொள்ளும்படி சமுதாய வர்க்கத் தட்டுகள் அனைத்தையும் நிர்ப்பந்திக்கின்றது. சீனாவில் வர்க்க சக்திகளின் பலாபல நிலையில் ஒரு புதிய மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. ஏராளமான மக்கள் கோமிந்தாங் செல்வாக்கிலும் கட்டுப்பாட்டிலும் இருந்து விலகி, புரட்சி முகாமுக்கு வருகின்றார்கள். சீன பிற்போக்குவாதிகள் நம்பிக்கையற்ற நிலையில் விழுந்து தனிமைப்பட்ட, கைவிடப்பட்ட நிலையில் கிடக்கிறார்கள். மக்கள் விடுதலை யுத்தம் இறுதி வெற்றியை நோக்கி விரையும் போது புரட்சிகர மக்கள் அனைவரும், மக்களின் நண்பர்கள் அனைவரும் மேலும் நெருக்கமாக ஒன்றுபடுவர். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் பிற்போக்கு சக்திகளை பூரணமாக ஒழித்துக் கட்டி, புரட்சி சக்திகளை முற்று முழுதாக வளர்த்து, தேசிய ரீதியில் ஒரு மக்கள் ஜனநாயகக் குடியரசை ஸ்தாபிக்க வேண்டும்; ஐக்கியம் ஜனநாயகம் இவற்றின் அடிப்படையில் சமாதானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று உறுதியாகக் கோருவர். மாறாக, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும், சீனப் பிற்போக்குவாதிகளும், அவர்களுடைய நண்பர்களும் நெருக்கமாக ஐக்கியப்பட இயலாதவர்கள்; எல்லையற்ற பூசல்கள், பரஸ்பர அவதூறுகள், குற்றச்சாட்டுகள், துரோகங்கள் ஆகியவற்றில் ஈடுபடுவர். இருந்தும், ஒரு விஷயத்தில் புரட்சி சக்திகளுக்கு குழி பறிக்கவும், பிற்போக்கு சக்திகளைப் பாதுகாக்கவும் சகல வழிகளிலும் பாடுபட அவர்கள் ஒத்துழைப்பர். பகிரங்கமான, இரகசியமான. நேரடியான மறைமுகமான எல்லா

வழிகளையும் உபயோகிப்பர். ஆனால், அவர்களுடைய அரசியல் சூழ்ச்சிகளும் அவர்களுடைய ராணுவத் தாக்குதல்களைப் போல் தோல்வியில் முடிவடையும் என்பதை நிச்சயித்துக் கூற முடியும். நிரம்பிய அனுபவமுடைய சீன மக்களும், அவர்களுடைய பொது அதிகாரியான சீன கம்யூனிஸ்ட் கட்சியும் எதிரியின் ராணுவத் தாக்குதல்களைச் சுக்குநூறுக்கியது போல. அவனுடைய அரசியல் சூழ்ச்சிகளையும் முறியடித்து, மகத்தான மக்கள் விடுதலை யுத்தத்தை இறுதி வரை நடத்துவது நிச்சயம்.

1949 ல் சீன மக்களின் விடுதலைச் சேனை யாங் சூ நதிக்கு தெற்கே முன்னேறி, 1948 லும் பார்க்க மேலும் மகத்தான வெற்றிகளைப் பெறும்.

1949 ல் பொருளாதார முன்னணியில் 1948 லும் பார்க்க மேலும் பெரும் வெற்றிகளைப் பெறுவோம். நமது விவசாய தொழில்துறை உற்பத்தி முன்னிலும் பார்க்க ஒரு உயர்ந்த மட்டத்தை அடையும். ரெயில்வே, உயர்வீதி போக்குவரத்து பூரணமாக மீட்கப்படும். தமது போர் நடவடிக்கைகளில் மக்கள் விடுதலைச் சேனையின் பிரதான பிரிவுகள் கொரில்லா யுத்தத்தின் குறிப்பிட்ட சில மிச்ச சொச்சங்களையும் இல்லாமற் செய்து மேலும் உயர்ந்த தரமுடைய ஒழுங்கான படையாக மாறும்.

1949 ல் பிற்போக்குவாதிகள் ஒருவரும் பங்குபற்றாத மக்கள் புரட்சியின் கடமைகளை நிறைவேற்றுவதை நோக்கமாக உடைய அரசியல் கலந்தாலோசனை மாநாடு கூட்டப்படும். சீன மக்கள் குடியரசு பிரகடனம் செய்யப்படும். குடியரசின் மத்திய அரசாங்கம் ஸ்தாபிக்கப்படும். இந்த அரசாங்கம் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் ஒரு ஜனநாய கூட்டரசாங்கமாக இருக்கும், இதில் ஜனநாயக கட்சிகளையும், மக்கள் ஸ்தாபனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்த தகுதியான நபர்கள் கலந்து கொள்வார்கள்.

சீன மக்களும், சீன கம்யூனிஸ்ட் கட்சியும், ஜனநாயகக் கட்சிகள், மக்கள் ஸ்தாபனங்கள் அனைத்தும் 1949ல் நிறை

வேற்றுவதற்குப் பாடுபடும் பிரதானமான ஸ்தூலமான கடமைகள் இவையே ஆகும். நாம் கஷ்டங்கள் அனைத்தையும் கடந்து இந்தக் கடமைகளை நிறைவேற்ற ஒருவர் போல் ஐக்கியப்பட வேண்டும்.

நமது போராட்டத்தில் ஆயிரமாயிரம் ஆண்டுகாலம் நீடித்திருந்த பிரபுத்துவ ஒடுக்குமுறையையும், 100 ஆண்டுகள் நீடித்திருந்த ஏகாதிபத்திய ஒடுக்குமுறையையும் என்றென்றைக்குமாகத் தூக்கியெறிவோம்.

1949 ஆண்டு மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஆண்டாகும். நமது முயற்சிகளை நாம் இரட்டிப்பாக்க வேண்டும்.

தொழிலாளி பிரசுராலயம்,
கொழும்பு-2.